

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க நகர் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் வசிக்கும் 1000 குடும்பங்களுக்கு நலதிட்ட உதவிகளை பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன் முன்னிலையில் சே.மணிமாறன் தலைமையில் அமைச்சர்கள் க.பொன்முடி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் வழங்கினர். உடன் மேயர் பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ., தண்டலம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (09.12.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில், சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில், வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் உள்ள இடர்பாடுகளுக்கு தீர்வு காண அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர்நிலை குழுவின் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் பூச்சி. எஸ்.முருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, இரா.மூர்த்தி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் மரு. தாரேஸ் அகமது, மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் – ரூ. 280 கோடி மதிப்பீல்

# 493 புதிய திட்டப் பணிகள்! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## 559 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கினார்!




**சென்னை,டிச.10-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நேற்று (09.12.2024) ரிப்பன்கட்டடவளாகத் தில்நடைபெற்றநிகழ்ச்சியில்பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.29.88 கோடி மதிப்பில் முடிவுற்ற 17திட்டப்பணிகளைப்பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.279.50கோடிமதிப்பில்493புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத்தொடங்கிவைத்து,559 நபர்களுக்கு பணி நியமன ஆணை களை வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:

முதலமைச்சர் அவர்களின் சீரிய நல்லாட்சியில் தமிழ்நாட்டின் தலைந கராகமாகவும், இந்தியாவிலும், உலக அளவிலும் முக்கியத்துவம் பெற்ற நக ரமாகவும் திகழ்ந்து வரும் பெருநகர சென்னை மாநகராட்சியில் பாலங் கள், சாலைகள், மேம்பாட்டு திட்டங் கள், அடிப்படை உள்கட்டமைப்பு வச திகள்செயல்படுத்தப்பட்டுநாள்தோறும் திறக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், பெருநகரசென்னைமாநக ராட்சியில்மக்கள்உடல்நலம்பேணும் வகையில்8புதியவிளையாட்டுத்திடல் கள்,புனரமைக்கப்பட்ட2நீர்நிலைகள், மக்களின் ஆரோக்கியம் மற்றும் பொழுதுபோக்கிற்கான 2 புதிய பூங் காக்கள், புதியபள்ளிக்கட்டடம்மற்றும் சுகாதாரமையகூடுதல்கட்டடம், நாய் களின் எண்ணிக்கையினை கட்டுப்ப டுத்துவதற்காகபுதிதாககட்டப்பட்டுள்ள 3நாய்கள்இனக்கட்டுப்பாட்டுமையங் கள்எனரூபாய்29.88கோடிமதிப்பீட் டில் முடிவுற்ற 17 புதிய திட்டப் பணிக ளைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

மேலும் 12 நீர்நிலைகளைப் புனர மைத்தல், மெரினா கடற்கரையில் நீலக்கொடிகடற்கரைதிட்டம், 3மழை நீர் வடிகால் பணிகள், 291 அம்மா உணவகங்களின் மேம்பாட்டு பணி கள், 10புதியஆரோக்கியநடைபாதை கள், 3 சமூக நல மையங்கள் கட்டும் பணி, செவிலியர் மற்றும் பெண்கள் தங்கும்விடுதி, 2நகர்ப்புரஆரம்பசுகா தார மையங்கள், சைதாப்பேட்டை காய்கறி மற்றும் பழங்கள் சந்தை, 3 இடங்களில்சென்னைநகரநுழைவுக் கான சாலை பெயர்ப் பலகைகள், 3 நடைபாதைகள் மேம்படுத்துதல், 7,644தெருக்களுக்குபுதியபெயர்பல கைகள், 148 பள்ளிக்கூடங்களை சீர மைத்தல், 12 கால்நடை கொட்டகை கள் அமைக்கும் பணிகள், நாய்கள் இனக் கட்டுப்பாட்டு மையம், என ரூபாய் 279.50 கோடி மதிப்பில் 493 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிக்கா லத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குகருணைஅடிப்ப டையில் 106 நபர்களுக்கு பணிநிய மன ஆணைகளை வழங்கினார். மேலும் மாநகராட்சி சுகாதாரத்துறையில்மருத்துவஅலுவ லர்கள், செவிலியர்கள் மற்றும் மருத் துவப்பணியாளர்கள்என453நபர்க ளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனஆணைகளைவழங்கினார்.

இந்தநிகழ்ச்சியில் நகராட்சி நிர்வா கத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம்மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன், இந்து சமயம்மற்றும்அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ப. தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஆர்.டி.சேகர், த.வேலு, இ. பரந்தாமன், டாக்டர்.நா.எழி லன், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஆ.வெற்றி அழகன், ஜே. ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிர பாகர் ராஜா, கா.கணபதி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகே யன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமர குருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர கற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், மாமன்ற ஆளுங் கட்சிதலைவர்ந.இராமலிங் கம், நிலைக்குழுத்தலைவர் கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலு வலர்கள் கலந்து கொண்ட னர்.


சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!**

**பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!**



மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 111 | ஆர்.பாபு வட்டக் கழக செயலாளர் | குலாம் அப்பாஸ் அலிகான் 7வது தெரு, ஆயிரம்விளக்கு | பசும்பொன் ரவிச்சந்திரன் தலைமை கழக பேச்சாளர்<br>ஜெயகுமரேஷ் கழக இளம் பேச்சாளர் |
| 2 | 107அ | வி.எம்.சிவா வட்டக் கழக செயலாளர் | பெருமாள் கோயில் தெரு, அமைந்தகரை | நெல்லிக்குப்பம் புகழேந்தி கொள்கை பரப்பு இணை செயலாளர் தலைமை கழக பேச்சாளர்<br>தி. கோகுல் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர் / தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**
செயலாளர்,
சென்னை மேற்கு மாவட்டம்


### ரூ.3531 கோடி

# 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள்!

## சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல்!



சென்னை, டிச. 10–

ரூ.3531.05 கோடி மதிப்பீட் டில் நடப்பு நிதியாண்டின் முதல் துணை மதிப்பீடுகளை நேற்று சட்டப் பேரவையில் நிதி அமைச் சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.

அது வருமாறு:–

தமிழ்நாடு அரசின் நிதி மற் றும் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2024–25ஆம் ஆண்டிற் கான முதல் துணை மதிப்பீடுகளை, 2024ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை முன் வைத்து பேசியதாவது:–

2024–25 ஆம் ஆண்டிற் கான முதல் துணை மதிப்பீடு களை முன் வைக்க இம்மாமன் றத்தின் விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான ஒரு அறிக்கை இம்மாமன்றத் தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 3,531.05 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கு வதற்கு வழிவகை செய் கின்றன.

2024–25ஆம் ஆண்டிற் கான மதிப்பீடுகள் தாக்கல் வரவு–செலவுத் திட்ட செய்யப்பட்ட பிறகு ‘புதுப் பணிகள்’ மற்றும் ‘புது துணைப் பணிகள்’ குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங் களுக்கு சட்டமன்றப் பேரவை யின் ஒப்புதலைப் பெறு வதும், எதிர்பாராச் செலவு நிதியி லி ருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகை யினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு, ஒன்றிய அரசு வகுத்துள்ள வரைமுறைகளின் படி மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 0.50 சதவீ தம் கூடுதல் கடன் பெறும் செயல் திறனுடன் மின்துறை இணைக் கப்பட்டுள்ள சீர்திருத்தத் திற்கான வழிகாட்டு நெறிமுறை களின்படி 1,634.86 கோடி ரூபாயை கூடுதல் நிதி இழப்பீட்டு மானியமாக அரசு அனுமதித் துள்ளது. இதற்காக துணை மதிப்பீடு களில் 1,500 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண்.14 – எரிசக்தித் துறை” என் பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானி யத்தில் ஏற் படும் சேமிப்பிலிருந்து மறுநிதி யொதுக்கத்தின் மூலம் செலவி டப்படும்.

அரசு போக்குவரத்துக் கழ கங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் விருப்ப ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு உரிய ஓய்வூதியப் பணப்பலன் களை போக்குவரத்து வழங்கிட, தமிழ்நாடு வளர்ச்சி நிதி நிறுவ னத்திற்கு 372.06 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள் ளது. இத்தொகை, துணை மதிப் பீடு களில் “மானியக் கோரிக்கை எண்.48 போக்குவரத்துத் துறை என்பதன்” கீழ் சேர்க்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதியச் சட்டம், 1954, 2024 ஆம் ஆண்டு சட்டம் எண்.6 மூலம் திருத் தம் செய்யப்பட்டு, எதிர்பாரா செலவு நிதி 150 கோடி ரூபாயி லிருந்து 500 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதற் காக, துணை மதிப்பீடுகளில் 350 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண்.16– நிதித் துறை என்பதன்” கீழ் சேர்க்கப் பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு பால் உற்பத் தியாளர்கள் கூட்டுறவு இணை யத்திற்கு 70 கோடி ரூபாயை மானியமாக அரசு அனுமதித் துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண்.8 பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வ ளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை) என்பதன்” கீழ் சேர்க் கப் பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர் களே, 2024 – 2025ஆம் முதல் துணை மதிப்பீடுகளை ஆண் டிற்கான இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (09.12.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தலைமையில் தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் தினம் 2025ஐ சிறப்பாக நடத்துவது தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், அரசு துணைச் செயலாளர் பவன்குமார் ஜி கிரியப்பன கிரியப்பனவர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி, IOFS, அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் புகழ்காந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட இளை ஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.கே.இனியன் ஏற்பாட்டில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியும், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு பள்ளி சீருடை, பேக், ஊக்கத்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியும் வடகரை அரசு ஆதிதிராவிடர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்டச் செயலாளரும் மாதவரம் மாதவ ரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர், தூத்துக்குடி எஸ்.ஜோயல் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், துணை அமைப்பாளர்கள் கேபிள் த.கணேசன், சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், டி.ஜி.ஆர்.மணிவண்ணன் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். புழல் ஒன்றிய பொறுப்பாளர் சி.அற்புதராஜ் முன்னிலை வகித்தார். இதில் தி.மு.க. நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். செ.யுவராஜ், ஏ.டேவிட் ஆகியோர் நன்றி கூறினர்.